### சென்னை ஒலிம்பிக் அகாடமியில் அமைக்கப்பட்டுள்ள

# புதிய தமிழ்நாடு விளையாட்டு அறிவியல் மையம்!

## துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் திறந்து வைத்தார்!

**சென்னை, ஏப்.6**

**துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (4.4.2025) சென்னை ஜவஹர்லால் நேரு விளையாட்டரங்க வளாகத்தில் உள்ள சென்னை ஒலிம்பிக் அகாடமியின் மூன்றாவது தளத்தில் 3 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள புதிய தமிழ்நாடு விளையாட்டு அறிவியல் மையத்தை திறந்து வைத்தார்.**

விளையாட்டு என்பது விளையாடும் வீரர்களுக்கு மட்டுமல்லாமல் அந்த விளையாட்டு வீரர் சார்ந்த நாட்டின் பொதுமக்கள், ரசிகர்கள் அனைவருக்கும் மிகுந்த உற்சாகத்தை அளிக்க வல்லதாகத் திகழ்கின்றது. ஒரு விளையாட்டு வீரர் வெற்றி பெறும் போது, அவர் சார்ந்த நாட்டின் அனைவரும் மிகுந்த உற்சாகமும், தன்னம்பிக்கையும் கொள்கின்றனர். உலகின் முன்னணி நாடுகள் தங்களது விளையாட்டு வீரர்களை உடல் ரீதியாகவும், மனரீதியாகவும் மிகுந்த வலிமை மிக்கவர்களாக உருவாக்கி வருகின்றனர். சர்வதேச போட்டிகளில் நமது நாட்டு விளையாட்டு வீரர்கள் வெற்றிகள் பெற்றாலும் அதிக பதக்கங்கள் வெல்ல முடியாத சூழ்நிலை உள்ளது.

**தமிழ்நாடு முன்னணி விளையாட்டுத் தலம்!**

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான திராவிட மாடல் அரசு தமிழ்நாட்டினை இந்தியாவில் மட்டுமல்லாமல் உலகின் முன்னணி விளையாட்டுத்தலமாக உருவாக்கி வருகின்றார்கள். அதற்காக, சென்னை மட்டுமல்லாமல் தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் விளையாட்டு அரங்கங்கள், உள் விளையாட்டு அரங்கங்கள், அதிநவீன பயிற்சி கூடங்கள் ஆகியவற்றை அமைத்து வருகின்றார்.

சர்வதேச போட்டிகளில் வெற்றி பெறநமது விளையாட்டுவீரர்களுக்கு போட்டி நடைபெறும் நாட்டின் சுற்றுச் சூழலுக்கேற்ப உடல் தகுதி, மன வலிமை, உளவியல் ரீதியாக தன்னம்பிக்கை, காயங்கள் ஏற்பட்டால் உடனடியாக மீண்டு அடுத்தடுத்த போட்டிகளில் கலந்து கொள்வதற்கான அறிவியல் ரீதியான வசதிகள் தேவைப்படுகின்றது.

**விளையாட்டு வீரர்களை மேம்படுத்தும் செயல்!**

இதனை கருத்திற்கொண்டு புதிய தமிழ்நாடு விளையாட்டு அறிவியல் மையத்தில் விளையாட்டு வீரர்களின் செயல்திறன், உடற்பயிற்சி, உடல் ஆரோக்கியம், உடலியல், உளவியல் மற்றும் விளையாட்டு மருத்துவம் ஆகியவற்றிற்கு முக்கியத்துவம் அளித்து அவர்களின் செயல்திறனை மேம்படுத்துவதும், உடற்பயிற்சி அறிவியலின் மூலம் ஆரோக்கியத்தை மேம்படுத்துவதும் நோக்கமாகக் கொண்டு அதிநவீன மருத்துவக் கருவிகள், விளையாட்டுகளின் தேவைக்கேற்ப விளையாட்டு வீரரின் உடலில் தேவைப்படும் தசைகளை வலுவேற்றும் வகையிலான சிறப்பு உபகரணங்கள் நிறுவப்பட்டுள்ளன. மேலும், இம்மையத்தில் மனநல நிபுணர், ஊட்டச்சத்து நிபுணர், சிறப்பு பயிற்சியாளர்கள், உளவியலாளர்கள், அதிக பயிற்சி காரணமாக ஏற்படும் தசைப்பிடிப்பை சீரமைக்கும் வல்லுநர்கள் பணியமர்த்தப்பட்டுள்ளனர்.

புதிய தமிழ்நாடு விளையாட்டு அறிவியல் மையத்தை திறந்து வைத்த தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்கள் விளையாட்டு வீரர்கள் சர்வதேச தரத்தில் அறிவியல் ரீதியாக பயிற்சிகள் பெறுவதற்காக செய்யப்பட்டுள்ள பல்வேறு வசதிகளை பார்வையிட்டார்.

**பெரியகுளத்தில் உள்விளையாட்டு அரங்கம்!**

மேலும் தேனி மாவட்டம் பெரியகுளம் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட மாவட்ட விளையாட்டு வளாகத்தில் 5.95 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள உள் விளையாட்டு அரங்கத்தை காணொலி காட்சி வாயிலாக திறந்து வைத்தார். இந்த உள் விளையாட்டு அரங்கத்தில் நிர்வாக கட்டடம், பயிற்றுநர் அறை, விளையாட்டு வீரர்கள் தங்கும் அறை, பார்வையாளர்களுக்கான இருக்கைகள், மரத்திலான தரைதளம், உபகரணங்களுக்கான இருப்பு அறை மற்றும் ஒளிரும் மின் விளக்கு வசதிகள் அமைக்கப்பட்டுள்ளன. இந்த அரங்கத்தில் கையுந்து பந்து, கூடைப்பந்து, டேபிள் டென்னிஸ், இறகுப்பந்து போட்டிகள் நடத்தவும், பயிற்சி பெறவும் வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

இராமநாதபுரம் மாவட்டம் பரமக்குடியில் உள்ள மாவட்ட விளையாட்டு வளாகத்தில் ரூ. 50 லட்சம் மதிப்பில் பளுதூக்குதல் பயிற்சி மையத்தையும் தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்கள் காணொலி காட்சி வாயிலாக திறந்துவைத்தார்.

இந்நிகழ்ச்சியில் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் இ. பெரியசாமி, பால்வளத்துறை அமைச்சர் ஆர். எஸ். ராஜகண்ணப்பன், இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, சட்டமன்ற உறுப்பினர்கள் இ.பரந்தாமன்(எழும்பூர்), கே.எஸ்.சரவணகுமார் (பெரியகுளம்), செ.முருகேசன் (பரமக்குடி), இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர்.அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய துணைத் தலைவர் டாக்டர்.அசோக் சிகாமணி உள்பட அரசு அலுவலர்கள், பயிற்சியாளர்கள் கலந்து கொண்டனர்.

### இலங்கை மீனவர்கள் இருவர் மற்றும் அவர்களது படகு

## தமிழ்நாடு அரசு நல்லெண்ண அடிப்படையில் விடுதலை!

சென்னை, ஏப். 6-

மனிதாபிமானக் கோணத்திலும், இரு நாட்டு நல்லுறவுகளையும் கருத்தில் கொண்டு, கடந்த 20.03.2025 அன்று கடலோர காவற்படையால் சிறைபிடிக்கப்பட்ட இலங்கை நாட்டைச் சேர்ந்த இரண்டு மீனவர்கள் மற்றும் 1DAY 0035 TCO என்ற பதிவெண் கொண்ட படகு, முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் தலைமையிலான தமிழ்நாடு அரசு விரைவாகவும், தேவையான அனைத்து நடைமுறைகளும் பின்பற்றி நேற்று முன்தினம் (04.04.2025) இலங்கை மீனவர்கள் இருவர் மற்றும் அவர்களது படகினை விடுவித்துள்ளது.

இது, கடலோர பிரச்சினைகளுக்கு தமிழ்நாடுஅரசு எப்போதும் மனிதாபிமான பார்வையுடன் அணுகும் என்ற உறுதியை மீண்டும் ஒருமுறை வலியுறுத்துகிறது.

இவ்வாறான நடவடிக்கைகள், இருநாடுகளுக்கும் இடையே நிலவும் நல்லிணக்கத்தை வலுப்படுத்துவதோடு, கடலோரங்களில் வாழும் மீனவர்களின் உரிமைகள் மற்றும் நலன்களை பாதுகாக்கும் தமிழ்நாடு அரசின் உறுதிப்பாட்டையும் வெளிப்படுத்துகின்றன. நம்பிக்கையும், புரிதலும், ஒருவருக்கொருவர் மதிப்பும் கொண்ட உறவுகளை கட்டியெழுப்புவதே தமிழ்நாடு அரசின் நிலையான நோக்கமாகும்.



கோவையில் கழகத் தலைவர், முதல்வர் அவர்களின் உத்தரவின்படி, துணை முதல்வர் அவர்களின் வழிகாட்டுதலின்படி கழக மாணவர் அணியின் கோவை, திருப்பூர், கரூர், நீலகிரி மாவட்டங்களுக்கான கள ஆய்வுக் கூட்டம் கழக மாணவர் அணிச் செயலாளர் இரா.ராஜீவ்காந்தி தலைமையில் நடைபெற்றது.

### திருவண்ணாமலை மாவட்டத்தில் பள்ளி சிறுவனைத் தாக்கிய

## சமையலர் - சமையல் உதவியாளர் மீது கடும் நடவடிக்கை!

### தமிழ்நாடு அரசு செய்தி வெளியீடு!

*திருவண்ணாமலை, ஏப்.6-*

*திருவண்ணாமலை மாவட்டத்தில் பள்ளி மாணவரைத் தாக்கிய சத்துணவு சமையலர் மற்றும் சமையல் உதவியாளர் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை விவரம் வருமாறு :*

*திருவண்ணாமலை மாவட்டம், போளூர் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள செங்குணம் கொல்லைமேடு ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளியில் திருமதி. இலட்சுமி, சத்துணவு சமையலர் மற்றும் திருமதி முனியம்மாள், சமையல் உதவியாளர் ஆகியோர் அப்பள்ளியில் ஐந்தாம் வகுப்பு பயிலும் மாணவரை துடைப்பத்தால் தாக்கும் வாட்ஸ் அப் வீடியோ வெளிவந்ததை தொடர்ந்து, உடன் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (சத்துணவு) திருவண்ணாமலை அவர்களால் நேரடி விசாரணை நடத்தப்பட்டது.*

*மாணவர், அவரது பெற்றோர், ஆசிரியர், சம்பந்தப்பட்ட சமையலர் மற்றும் சமையல் உதவியாளர் ஆகியோர்களிடம் நேரில் விசாரணை மேற்கொண்டு தாக்குதல் நடத்திய பணியாளர்கள் தமது தவறை ஒப்புக்கொண்டதன் அடிப்படையில். அவர்கள் இருவரும் போளூர், வட்டார வளர்ச்சி அலுவலரால் உடனடியாக, 03.04.2025 அன்றே, தற்காலிகப் பணிநீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.*

*மேலும், குற்றம் சாட்டப்பட்ட சமையலர் மற்றும் சமையல் உதவியாளர் மீது பி.என்.எஸ் (BNS) சட்டம், பிரிவு 131 ன் கீழ் மற்றும் சிறார் நீதி (பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு) சட்டம், 2015, பிரிவு 75 ன் கீழ் முதல் தகவல் அறிக்கை திருவண்ணாமலை மாவட்டம், போளூர் காவல் நிலை யத்தில் பதியப்பட்டு, நேற்று முன்தினம் (04.04.2025) கைது செய்யப்பட்டுள்ளனர். இவ்வாறு அரசின் செய்திக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.*


